பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 11 செவ்வாய்க்கிழமை 28.10.2025 கதிர் 352

### இனி இது ரகசியம் அல்ல!

அண்மைக் காலங்களாக இலங்கையில் நடக்கும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் கொலையாளிகளைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளும் ஒரு ☞ 2

# ஹிட்லருக்கு எதிராக உலகம் திரண்டது போன்று ஆளும்தரப்புக்கு எதிராக அனைவரும் ஒன்றுபடுக

## நவம்பர் 21 பேரணிக்கு 'மக்கள் குரல்' அமைப்பு அழைப்பு

ஜனநாயகம் மற்றும் அரசியல் உரிமைகளுக்குஎதிரானஆளும்தரப்பின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கு எதிர்த்து அனைத்து எதிர்கட்சிகளும் ஒன்றிணையவேண்டும். ஆளும்தரப்புக்கு எதிரான மாபெரும் பேரணியை நவம்பர்21நுகேகொடையில்ஆரம்பிக்க ஒன்றுப்படவேண்டும்என மக்கள் குரல் அமைப்பின் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்தனர்.

நவம்பர் 21 நுகேகொட பேரணியில் எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கலந்துக்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் குரல் அமைப்பின் பிரதிநிதிகள் கூட்டாக வலியுறுத்தினர்.

இரண்டாம்உலகபெரும்போரின்போது ஹிட்லருக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட்டதைப் போன்று ஜனநாயகத்தை பாதுகாக்க ஆளும்தரப்புக்கு எதிராகவும் அனைவரும் ஒன்றுப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஆளும்தரப்பு மக்களைஏமாற்றி,வாழும்உரிமையை இல்லாதொழித்துள்ளதாக குறிப்பிட்டு எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவுடன் உருவாக்கப்பட்ட 'மக்கள் குரல்' எனும் அமைப்பு எதிவரும் நவம்பர் 21 மாபெரும்'மக்கள்குரல்' என்ற பெயரில் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப் பேரணி தொடர்பில் தெளிவுப்படுத்தும் செய்தியாளர்கள் சந்திப்பு அதன் பிரதிநிதிகளின் ☞ 2

## ஆளும்தரப்பு 5 வருடங்களையும் நிறைவு செய்ய இடம் தரப்படாது

### மக்கள் விடமாட்டார்கள் என்கிறது சுதந்திரக் கட்சி

நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் ஆளும்தரப்பை தெரிவு செய்துள்ளதால் அரச நிர்வாகத்தை நாங்கள் நெருக்குதலுக்கு உள்ளாக்கவில்லை. 5 வருட பதவிக் காலத்தை நிறைவு செய்தற்கு இடமளித்தோம். ஆனால் ஆளும்தரப்பு பதவிக் காலத்தை நிறைவு செய்ய இடமளிப்பதற்கு நாட்டு மக்கள் தயாராக இல்லை என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மூத்த தலைவர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கும், அவர் தலைமையிலான ஆளும்தரப்புக்கும் எதிர்க்கட்சிகள் எவ்வித நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை. ஜேவிபியைப் ☞ 2

## எனக்கு பாதாள உலகுடன் தொடர்பு என்கிற பொலிஸ் மா அதிபரின் கூற்று முழுப்பொய்

### சட்டநடவடிக்கை எடுப்பேன் என்கிறார் ஜகத் விதான எம்.பி.

பாதாள உலகக் குழுக்களுடன் காணப்படும் முரண்பாடுகளே எனது உயிர் அச்சுறுத்தலுக்கான காரணம் என பொலிஸ் மா அதிபர்தெரிவித்துள்ளமைஅடிப்படையற்றதாகும். அவ்வாறு கூறி எனது நற்பெயருக்கு அவதூறு ஏற்படுத்தியுள்ள பொலிஸ் மா அதிபருக்கெதிராக சட்டநடவடிக்கைஎடுக்கவுள்ளேன்என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

எனக்குஉயிர்அச்சுறுத்தல்காணப்படுகிறது என்பதை ஆதரத்துடன் சபாநாயகர் முன்னிலையில் நாடாளு மன்றத்தில் நிரூபித்திருக்கின்றேன். ஆனால் பொலிஸ்மா அதிபர் எனக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பிருப்பதாக ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். உயிர் அச்சுறுத்தல் காணப்படும் நபர்களின் பெயர் பட்டியலில் 24ஆவதாக என்னுடைய பெயர் காணப்படுகிறது. ஆனால் தொடர்புடைய குற்றச் செயல்கள் என பொலிஸ் அறிக்கையின் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

மத்துகம ஷான் என்ற நபரால் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகக் கூடும் எனஅதில்குறிப்பிடப்பட்டுள்ளது.ஆனால் எனக்கும் அந்த நபருக்கும் எவ்வித மோதலும் கிடையாது. அவருடன் முரண்பாடுகள் ஏற்படுமளவுக்கு எமக் கிடையில் எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் கிடையாது. முச்சக்கர வண்டியொன்றில் சென்ற ☞ 2

## நாட்டை முன்னேற்றும் பாதை விக்கிரமசிங்கவுக்கே தெரியும்

### ஐ.தே.க. தவிசாளரின் நம்பிக்கை

வங்குரோத்து அடைந்திருந்த நாட்டை மீட்டு, வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய தலைவர் ரணில் விக்ரமசிங்கவாகும். அதனால் நாட்டை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்ல முடியுமான பாதை அவருக்கே தெரியும். அதனால் நாட்டின் அபிவிருத்திக்காக ரணில் விக்ரமசிங்கவை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன ☞ 2

## அரசியல்வாதி போன்று செயற்படுகிறார் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய

### நாமல் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு

பொலிஸ்மா அதிபர் அரசியல்வாதி போன்று செயற்படுகிறார். பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. ஆளும்தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே பொலிஸார் செயற்படுகின்றனர் என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் பிரதிநிதி ஒருவரை பகிரங்கமாக சுட்டுக்கொலை செய்யும் நிலையே ☞ 2

## புதிய காரில் ஹெரோயின் கடத்தல் யாழ். நகரில் மாட்டினார் ஒருவர்

யாழ் நகரில் இலக்க தகடற்ற புதிய காரில் ஹெரோயின் போதைப்பொருளை கடத்திச் சென்ற நபரொருவர் இன்று இரவு கைதுசெய்யப்பட்டார்.

யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 11கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டு கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் பிரபல வர்த்தகரின் மகன் எனவும் ஏற்கனவே ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பான வழக்கில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கைதிலிருந்து தப்புவதற்காக தமக்கு கையூட்டுவழங்க முயற்சித்ததாகவும் பொலிஸார் ☞ 2

## மொத்த பாதுகாப்பு கட்டமைப்பு அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது

### பொது ஜன பெரமுன குற்றச்சாட்டு

ஜேவிபியின் கட்சிக் காரியாலயத்தின் நிகழ்ச்சி நிரலில் பொலிஸ் மா அதிபர் செயற்படுத்துகிறார். முழு பாதுகாப்பு கட்டமைப்பும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு செய்தியாளர்கள் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பூகோளக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை ஆளும்தரப்பு தனக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொண்டது. நாட்டுக்குச் சேவையாற்றிய அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அனைவரும் ☞ 2

## சண்டித்தனம் விடும் சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

சபாநாயகரின் செயற்பாடுகள் சண்டித்தனமானவை. பொலன்னறுவையில் உள்ள பொது சுகாதார பரிசோதகர் ஒருவரைநாடாளுமன்றத்துக்கு அழைத்து வந்துநாடாளுமன்ற சமையலறையை துப்பரவு செய்கிறார். கடந்த காலங்களில் இவ்வாறான நிலமை காணப்படவில்லை. சபாநாயகரின் செயற்பாடுகள் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளை அவமதிப்பதாகவுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அதுகோரல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திர்க்கட்சிகளின் கூட்டு செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாறுப்பட்ட அரசியல் கொள்கை மற்றும் நிலைப்பாட்டை கொண்டுள்ள நாங்கள் அனைவரும் ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற பொது இலக்குடன் ஒன்றிணைந்துள்ளோம். இந்த ஒன்றிணைவு அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது.

ஜனநாயகம் இல்லாதொழிந்தால் அது ஒட்டுமொத்த ☞ 2

## இனி இது .....

விறுவிறுப்பான திரைப்படத்தின் திரைக் கதையை ஒத்தவையாக இருக்கின்றன. நீதிமன்றத்திற்குள் நுழைந்து குற்றவாளிக் கூண்டில்வைத்தேஒருவரைச்சுடுவதிலிருந்து அலுவலக அறைக்குள் நுழைந்து பிரதேச சபைத் தவிசாளரைச் சுடுவது வரைக்கும் அனைத்தும் விறுவிறுப்பான திரைக் கதையைஒத்தவை. அந்தக்குற்றவாளிகளை பொலிஸார் தேடிக் கண்டுபிடிப்பதும் கைது செய்வதும் கூட அதற்கு எந்த வகையிலும் குறையாதவிறுவிறுப்புத்திரைக்கதையாகவே இருக்கின்றன. அதற்கொரு உதாரணம் தவிசாளர் கொலையாளிகளைப் பொலிஸார் கைது செய்துள்ள விதம். அதனைக் கீழே விவரிக்கின்றேன்.

வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் லசந்த கொலையாளிகள் மகரகம, நாவின்ன பகுதியில் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் முதன்மைச் சந்தேகநபரான கொலையாளி ஆறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் துபாயில் வசிக்கும் ராஜித என்ற நபரால் ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் ரூ. 1.5 மில்லியன் மதிப்புள்ள ஒப்பந்தத்தின்படி இந்தக் கொலை நடந்ததாகத் தெரியவந்துள்ளது.

இந்த ராஜித, பிரபல பாதாள உலகத் தலைவரான ஹரக் கட்டாவின் முக்கிய உதவியாளர்களாக அடையாளம் காணப்பட்ட மிதிகம ருவான் மற்றும் மிதிகம சூட்டி என அழைக்கப்படும் இரண்டு நபர்களுடன் தொடர்புகளைப் பேணி வருகிறார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மிதிகம ருவான் தற்போது பூசா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மிதிகம சூட்டி சமீபத்தில் ஓமான் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

துபாயில் வசிக்கும் ராஜித, முழுக் கொலை நடவடிக்கையையும் ஒருங்கிணைத்து, துப்பாக்கிதாரருக்குதுல்லியமானஅறிவுறுத்தல்களையும்தப்பிக்கும்வழிகளையும்வழங்கினார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளைப் பயன்படுத்திச் சுடப் பயிற்சி பெற்றார் எனவும், அவர் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே முறையான கல்வியைப் பெற்றிருக்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், அங்குலுகம, பண்டிபிட்ட, கோண்டபனேவைச் சேர்ந்த ஹக்மன பரண லியனகே நுவான் தாரக்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வெலிகம பிரதேச சபைத் தலைவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய பின்னர், துப்பாக்கிதாரி தனது மனைவி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஆகியோருடன் கெக்கிராவைக்குத் தப்பிச் சென்றுள்ளார். அவரது அலைசியைக் கண்காணித்ததன் மூலம், சிஐடியினர் அவர்களின் இருப்பிடத்தை அடையாளம் கண்டுகொண்டனர் - ஒரு கைவிடப்பட்ட வீட்டில் அவர்கள் மறைந்திருப்பதை அறிந்து அதைச் சுற்றி வளைத்தனர். சிஐடி அதிகாரிகள் முதலில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் சந்தேக நபர்களை அங்கு கைது செய்துள்ளனர். பெண் சந்தேகநபர் துப்பாக்கிதாரி மனைவி என அடையாளம் காணப்பட்டார்.

சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டபோது, அவர்களுடன் இருந்த மேலும் பலர் பொலிஸாருடன் முரண்பட்டுச் சண்டையிட்டனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு துப்பாக்கிதாரி தப்பிச் சென்றார்.

துபாயில் உள்ள ராஜிதவிடம் இருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, சந்தேகநபர் கெகிராவாவிலிருந்து கொழும்புக்கு வந்துள்ளார், வழியில் பல பேருந்துகளில் மாறி மாறி ஏறி நண்பகலில் கொழும்பு கோட்டையை அடைந்துள்ளார்.

அவர் கொழும்புக்கு வந்தபோது, 'ஐஸ்' (மெத்தம்பேட்டமைன்) மீது அவருக்கு அதிக ஆசை இருந்ததாகவும், போதைப்பொருளைத் தேடி பொரள்ளை மற்றும் ஹன்சாபுரத்திற்குச் சென்றார் எனவும் கூறப்படுகிறது.

குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தொழில்நுட்ப கண்காணிப்பு மூலம் சந்தேக நபரைத் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். நேற்று (26) அவர் புறக்கோட்டை மற்றும் கோட்டையைச் சுற்றி கணிசமான நேரத்தைச் செலவிட்டிருந்தார், அதன்படி, அவரைப் பிடிக்க போலீசார் அந்த பகுதிகளில் ஒரு சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நடவடிக்கை நடந்து கொண்டிருந்தபோது, சந்தேக நபர் கோட்டையிலிருந்து கொட்டாவக்கும், கொட்டாவிலிருந்து மகரகமக்கும் செல்லும் பேருந்தில் ஏறினார். மகரகமவுக்கு வந்ததும், தனது பழைய தொலைபேசியை அப்புறப்படுத்தி புதிய ஒன்றை வாங்க ஒரு மொபைல் போன் விற்பனைக் கடைக்குச் சென்றுள்ளார்.

அவர் மொபைல் போன் கடையிலிருந்து வெளியேறும்போது, அரச புலனாய்வு சேவையைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவர் அவரைக் கவனித்தார். சிவில் உடையில் இருந்த இன்ஸ்பெக்டரைக் கண்டதும் அவர் பொலிஸ் எனச் சந்தேகப்பட்ட சந்தேகநபர் பதற்றமடைந்தார். அவரதுசந்தேகத்திற்கிடமான நடத்தையைக் கவனித்த இன்ஸ்பெக்டர், அவரைப் பிடிக்க முயன்றார்.

உடனே சந்தேக நபர் தப்பி ஓடத் தொடங்கியபோது, அவர்ஒருதொலைபேசியைத் திருடிக்கொண்டு தப்பியோடுவதாக நம்பிய மற்றவர்களும் அவரைத் துரத்திச் சென்று பிடித்தனர். அதன் பின்னரே சிஐடியினர் அந்த இடத்திற்கு வந்து சந்தேகநபரைக் கைது செய்தனர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஹிட்லருக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பங்குப்பற்றலுடன் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர்கள் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அதுகோரல, ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உபதலைவர் மகிந்த அமரவீர, பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, பிரசன்ன ரணதுங்க, சாகல காரியவசம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சானக மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரேம்நாத் சி.தொலவத்தே, சஞ்ஜீவ எதிரிமான்ன, மொஹமட் முஸம்பில், ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர சாரியவசம் எமக்குள் அரசியல் ரீதியில் பல வேறுபாடுகள் காணப்படலாம்.ஆனால் ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றுப்பட வேண்டும்.இந்த ஆளும்தரப்பு ஜனநாயகத்தை இல்லாதொழித்து சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கும், தனிக்கட்சி ஆட்சி முறைமையை உருவாக்குவதற்கும் முயற்சிக்கிறது. அதற்கு இடமளிக்கக்கூடாது.

இரண்டாம் உலகப்பெரும் போரின்போது ஹிட்லருக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட்டன.இதே போன்று ஜனநாயகத்தை பாதுகாக்கவும், ஆளும்தரப்புக்கு எதிராகவும் நவம்பர் 21 அனைவரும் ஒன்றுப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

ஐக்கியதேசியக்கட்சியின்பொதுச்செயலாளர் தலதா அதுகோரல கருத்துத் தெரிவிக்கையில், மாறுப்பட்ட அரசியல் கொள்கை மற்றும் நிலைப்பாட்டை கொண்டுள்ள நாங்கள் அனைவரும் ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற பொது இலக்குடன் ஒன்றிணைந்துள்ளோம்.இந்த ஒன்றிணைவு அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது.

ஜனநாயகம் இல்லாதொழிந்தால் அது ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையையும் அழிக்கும். ஆகவே ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கு உண்டு ஆகவே அனைவரும் ஒன்றுப்படவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

இந்தச்செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துக் கொண்ட பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில, இலங்கை ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறது. ஜனநாயகத்துக்கு எதிராக செயற்பாடுகள் தீவிரமடையும்போது அரசியல் கட்சிகள் அனைத்தும் தமது தனிப்பட்ட அரசியல் கொள்கை மற்றும் அரசியல் நிலைப்பாட்டை புறக்கணித்து ஒன்றுப்பட வேண்டும். கடந்த காலங்களிலும் இவ்வாறான தன்மையே காணப்பட்டது என்றார்.

## அரசியல்வாதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காணப்படுகிறது. இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொலைகளையும் ஆளும்தரப்பு பாதாளக் குழுக்களின் கணக்கில் சேர்க்கிறது. எதிர்க்கட்சியின் சகல உறுப்பினர்களும் பாதாளக் குழுக்களுடன் தொடர்புக்கொண்டுள்ளார்கள் என்று மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டையும் ஆளும்தரப்பு ஏற்படுத்தியுள்ளது.

நல்லாட்சிக் காலத்தில் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தி புலனாய்வுத் தகவல்களை அலட்சியப்படுத்தியவர்கள்தான் இன்று பாதுகாப்பு துறையுடன் தொடர்புடைய உயர் பதவிகளில் உள்ளார்கள். இன்றும் புலனாய்வுத் தகவல்களை இவர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள்.

323 கொள்கலகள் எங்கு சென்றது என்பது இன்றுவரை கண்டுப்பிடிக்க முடியவில்லை. இலங்கைக்கு இரண்டு கொள்கலன்களில் ஐஸ் போதைப்பொருள் வருவதாக சர்வதேச புலனாய்வுப் பிரிவு ஆளும்தரப்புக்கு தகவலளித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை. தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை ஆளும்தரப்பு தனது அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக்கொள்கிறது.

பொலிஸ்மா அதிபர் அரசியல்வாதி போன்று செயற்படுகிறார். பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. ஆளும்தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே பொலிஸார் செயற்படுகின்றனர். அரசியல் நோக்கங்களுக்கு அமைய பொலிஸ் திணைக்களம் செயற்பட்டால் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்றார்.

## ஆளும்தரப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்று நாங்கள் தொழிற்சங்கங்களைத் தூண்டிவிட்டு பணிப்புறக்கணிப்பு போராட்டங்களை மேற்கொள்ளவில்லை. வீதியில் இருந்து போராட்டம் செய்யவில்லை.

நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் ஆளும்தரப்பை தெரிவு செய்துள்ளதால் அரச நிர்வாகத்தை நாங்கள் நெருக்குதலுக்கு உள்ளாக்கவில்லை. 5 வருட பதவி காலத்தை நிறைவு செய்தற்கு இடமளித்தோம்.ஆனால் ஆளும்தரப்பு பதவிக் காலத்தை நிறைவு செய்ய இடமளிப்பதற்கு நாட்டு மக்கள் தயார் நிலையில் இல்லை.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் விடுதலை முன்னணி 75 ஆண்டுகால ஆட்சியை விமர்சித்து மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தினார்கள். இதன் விளைவை ஆளும்தரப்பு இன்று எதிர்கொள்கிறது.

ஜனநாயககட்டமைப்பில்இருந்துக்கொண்டு ஆளும்தரப்பு சர்வாதிகாரத்தை கட்டவிழ்த்துள்ளது. ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாடுகளை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.அதற்கு அனைவரும் ஒன்றுப்பட வேண்டும் என்றார்.

## நாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு வங்குரோத்து அடைந்து பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில், அந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்டு, முன்னோக்கி கொண்டு சென்ற தலைவர் ரணில் விக்ரமசிங்கவாகும். அதனால் நாட்டை கொண்டுசெல்ல வேண்டிய பாதையை நன்கு அறிந்தவர் ரணில் விக்ரமசிங்கவாகும்.

அதனால் 50 வருட அரசியல் அனுபவமுள்ள தலைவரான ரணில் விக்ரமசிங்கவை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்துக்கு செல்வது தொடர்பில் இதுவரை கலந்துரையாடப்படவில்லை. தற்போதைக்கு அது அவசியமில்லை என்றே நினைக்கிறேன்.

அத்துடன் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி ஒன்றை கட்டியெழுப்புவதன் நோக்கம், பொதுவான இணக்கப்பாட்டுக்காக அனைவரும் ஒன்றாக அமர்வதாகும் அவ்வாறு அனைவரும் ஓரிடத்தில் அமர்ந்த பின்னர, இணைந்துகொண்டுள்ள அணிக்கு பாதுகாப்பு வழங்க முடியுமான நபர் யார் என்பதை அந்த அணி தீர்மானிக்க வேண்டும். அடிவாங்காமல் அரசியல் செய்ய முடியுமான நபர் யார் என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றார்.

## சண்டித்தனம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு மக்களின் வாழ்க்கையையும் அழிக்கும். ஆகவே ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கு உண்டு.

75 ஆண்டுகால ஆளும்தரப்புக்களை சாபம் என்று விமர்சித்தே இந்த ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது. 75 ஆண்டுகாலத்தை சபிக்கும் இந்த ஆட்சியாளர்கள் இலவச கல்வி மற்றும் இலவச மருத்துவம் ஆகிய துறைகளின் உச்சப் பயனைப் பெற்றுக்கொண்டார்கள்.

போலியான வாக்குறுதிகளால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள். ஜேவிபியின் வரலாற்றைத் தெரிந்துக்கொள்ளாத இளம் தலைமுறையினர் ஜேவிபியின் வெறுப்பு பேச்சுக்கு உத்வேகமடைந்து ஆதரவளித்தார்கள். வெகுவிரைவில் அவர்கள் உண்மையை விளங்கிக்கொள்வார்கள்.

சபாநாயகரின் செயற்பாடுகள் சண்டித்தனமானவை. பொலன்னறுவையில் உள்ள பொது சுகாதார பரிசோதகர் ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வந்து நாடாளுமன்ற சமையலறையை துப்பரவு செய்கிறார்.கடந்த காலங்களில் இவ்வாறான நிலமை காணப்படவில்லை. சபாநாயகரின் செயற்பாடுகள் நாடாளுமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகளை அவமதிப்பதாகவுள்ளது. பதவி காலம் முடிவடைந்தவுடன் வீடு செல்ல வேண்டும் என்பதை சபாநாயகர் நினைவில் வைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

## எனக்கு பாதாள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவொன்று எனது குடும்பத்தாரிடம் என்னைப்பற்றி விசாரித்திருக்கின்றனர். இது தொடர்பில் குறித்த முச்சரவண்டியின் இலக்கத்தோடு நான் மத்துகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்திருக்கின்றேன். ஆனால் அவ்வாறு விசாரித்தவர்கள் பொலிஸார் என பின்னரே தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினரொருவருடைய இல்லத்துக்கு எதற்காக பொலிஸார் சிவில் உடையில் அனுப்பி வைக்கப்பட்டனர்? இது தொடர்பில் அவர்கள் ஏன் எனக்கு முன்னரே அறிவிக்கவில்லை? உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகப் பொலிஸ்மா அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், எனக்கு தற்காலிகமாகவே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. எந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டாலும், அதற்காக நான் பொலிஸாரிடம் கெஞ்சப் போவதில்லை.

பொலிஸ்மா அதிபரால் எனது நன்பெயருக்கு அவதூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கெதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம். சபாநாயகரிடம் இது குறித்து தெரிவித்ததன் பின்னர், என் முன்னிலையில் சபாநாயகரால் பொலிஸ்மா அதிபரிடம் எனக்கான பாதுகாப்பை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் இது குறித்து உரையாற்றியிருந்தார். அவ்வாறிருக்கையில் எனக்கு தற்காலிக பாதுகாப்பை வழங்குவதற்கு எந்த அடிப்படையில் பொலிஸ் மா அதிபர் தீர்மானித்தார்? இதற்கு நீதிமன்றத்தில் பொலிஸ்மா அதிபர் விளக்கமளிக்க வேண்டும் என்றார்.

## புதிய காரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபரை மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார்

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# ஊழலை எதிர்த்துப் போராடுவது தொடர்பில் அயலுறவுத்துறை அதிகாரிகளுக்கு விளக்கம்

ஊழலை எதிர்த்துப் போராடுதல் மற்றும் நேர்மையான நடத்தையின் பொருத்தப்பாடு தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு இலஞ்ச மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப்புலனாய்வுசெய்வதற்கானஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்கவினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

'ஊழலை எதிர்த்துப் போராடுதல் மற்றும் நேர்மை மற்றும் நெறிமுறைசார் நடத்தையின் பொருத்தப்பாடு' தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலான நிகழ்வொன்று இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்கவால் கடந்த வியாழக்கிழமை (23) அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் வளாகத்தில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வு அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தின் அறிவுறுத்தலின்பேரில், அமைச்சின் உள்ளக விவகாரப் பிரிவு மற்றும் இலங்கை வெளிநாட்டுச் சேவை சங்கம் என்பவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இலங்கை வெளிநாட்டு சேவையின் அதிகாரிகளுக்கு மேலதிகமாக அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு மற்றும் தொடர்புடைய உள்ளக விவகாரப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அதிகாரிகளும் இவ்விழிப்புணர்வூட்டல் நிகழ்வில் பங்கேற்றனர்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க, அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கு இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான தற்போதைய சட்டக் கட்டமைப்பு, அரசு ஊழியர்கள் தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பின் கீழ் பொதுமக்களுக்கு உச்சபட்ச சேவையை வழங்கவேண்டிய வழிமுறைகள் மற்றும் சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்புவதில் அரச ஊழியர்களின் பொறுப்பு குறித்த அறிவூட்டலை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்.

## ரூ. 3 கோடி பெறுமதியான போதைப் பொருள் சிக்கியது

### இந்தியர் ஒருவரும் கைது

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து 3 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி மிக்க ஹெரோயின் போதைப்பொருளுடன் இந்தியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமான நிலைய பயணிகள் வருகை முனையத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சந்தேகத்திற்கிடமான பயணி ஒருவரை தடுத்து நிறுத்தி, சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் சோதனையிட்டுள்ளார். இதன்போது அப்பயணியின் சந்தேகத்திற்கிடமான பயணப்பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பெருமளவான போதைப் பொருள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2 கிலோ 832 கிராம் ஹெரோயின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் 3 கோடியே 40 இலட்சம் ரூபா பெறுமதியானது. என சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டுள்ளது. 32 வயதுடைய இந்தியர் அதனுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஞாயிற்றுக்கிழமை 4.15 மணியளவில் மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில் இருந்து இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல் 315 என்ற விமானத்தின் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையை அடுத்து, சந்தேகநபர் இலங்கைக்கு வருகை தருவது இதுவே முதல் தடவை என்றும் அவரால் கொண்டுவரப்பட்ட போதைப்பொருள் பம்பலப்பிட்டிய பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நபர் ஒருவரிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டு இருந்ததாகவும் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் தொடர்பில் விமான நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## சிறைச்சாலையிலிருந்து தொலைபேசி மூலம் உயிர் அச்சுறுத்தல் விடும் கைதிகள்

### விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு

சிறைகளில் இருக்கும் சில கைதிகள், கைத்தொலைபேசிகள் மூலம் வெளி நபர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவங்கள் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு குற்றப் பிரிவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு குற்றப் பிரிவு சமர்ப்பித்த அறிக்கையைக் கருத்தில் கொண்டதன் பின்னர், கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தங்களுக்குக் கிடைத்த பெயர் குறிப்பிடாத முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட கைதிகளை அடையாளம் காண தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளைக் கோரி விசாரணைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும், குறித்த தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கைகளை தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள உத்தரவு பிறப்பிக்குமாறும் பொலிஸார் நீதிமன்றத்தில் கோரினர்.

சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்ட நீதிவான், பொலிஸார் கோரிய தொலைபேசி அழைப்பு விவரங்களை வழங்குமாறு பல தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, சம்பவம் குறித்து விரிவான விசாரணையை நடத்தி, அதில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புரிதலே தீர்வு

இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெறும் சில நிகழ்வுகள், குறிப்பாகபள்ளிக்குழந்தைகளைச்சுற்றியுள்ளமனநலக்குழப்பங்களும், தொழில்நுட்பப் பயன்பாட்டைச் சார்ந்த விவாதங்களும், நமது குழந்தைகளின் மொத்த நலனையும் நெருக்கமாக சிந்திக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. இவை வெறும் கல்வி அல்லது குடும்பக் குறைகளாக அல்லாமல், சமூக மாற்றம், தொழில்நுட்ப வளர்ச்சி, மற்றும் குழந்தைகளின் மனநிலை ஆகியவற்றின் நுண்மையான இணைப்பை வெளிப்படுத்துகின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர் சரோஜா சவித்ரி பவுல்ராஜ் அண்மையில் அறிவித்துள்ள, "12 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் கைப்பேசி (Smartphone) வைத்திருக்கவோ பயன்படுத்தவோ கூடாது" என்ற அரசுத் திட்டம் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. அமைச்சர் குறிப்பிட்டபடி, குழந்தைகள் அதிகமான திரைத்தொலைவு (Screen time) மற்றும் இணையத்தில் ஏற்படும் தீய உள்ளடக்கங்களிலிருந்து பாதுகாக்கப்படவேண்டும் என்பதே இதன் நோக்கம் என்கிறார். குழந்தைகளின் உணர்ச்சி வளர்ச்சிக்கும், சமூக பழகுதலுக்கும் இது ஒரு நல்ல நோக்கமெனதோன்றினாலும், அந்தத் தடை நடைமுறையில் எவ்வளவு சாத்தியமெனும் கேள்வி எழுகிறது.

இன்றைய உலகில் கல்வி, தொடர்பு, பாதுகாப்பு ஆகிய அனைத்தும் தொழில்நுட்பத்தின் வழியே இயங்குகின்றன. அத்தகைய சூழலில் 12 வயதிற்குக் குறைந்த குழந்தைகளின் கைப்பேசி பயன்பாட்டை முழுமையாகத் தடைசெய்வது ஒருவகையில் அவர்களைச் சமூக ரீதியாகப் பிரிப்பதாக மாறக்கூடும். உலகின் பல நாடுகளில் பாடசாலைகளுக்குள், தேர்வுகாலங்களில், அல்லது பாட நேரங்களில் கைப்பேசிகள் பயன்படுத்துவதைத் தடைசெய்வது சாதாரணம். ஆனால், சொந்தமாகக்கைப்பேசிவைத்திருப்பதையேதடுக்கமுயல்வது மிகைப்படுத்தப்பட்ட நடவடிக்கையாகும். இதனால் எதிர்மறையான விளைவுகள் ஏற்படக்கூடும். குழந்தைகளில் ஆர்வமும் எதிர்ப்பும் அதிகரிக்கக் கூடும்.

மேலும், இந்த முடிவு விஞ்ஞான ஆதாரங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டதா என்ற கேள்வியும் முக்கியமானது. இலங்கைக் குழந்தைகளின் கைப்பேசி பயன்பாடு, அதன் நன்மை–தீமைகள் குறித்த சரியான ஆய்வுகள் உள்ளனவா? இன்று பல மாணவர்கள் ஆன்லைன் வகுப்புகள், பெற்றோர்களுடன் அவசரத் தொடர்பு, கல்வி தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக கைப்பேசிகளை நம்புகின்றனர். இவற்றை முழுமையாகத் தடுக்க முயல்வது, குழந்தைகளின் கல்வி வாய்ப்புகளையும் சுயநம்பிக்கையையும் குறைக்கக்கூடும்.

அதனால், பிரச்சினைக்கு தீர்வாகத் தடை அல்ல, விழிப்புணர்வே சரியான வழி. தொழில்நுட்பத்திலிருந்து குழந்தைகளைப் பிரிப்பதற்குப் பதிலாக, அதை பொறுப்புடன்பயன்படுத்தக்கற்றுக்கொடுக்கவேண்டியது முக்கியம். 'டிஜிட்டல் கல்வி' (Digital Literacy) மற்றும் இணைய பொறுப்பு கல்வி பாடத்திட்டங்களுக்குள் சேர்க்கப்பட வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் நிர்வாகிகள் இணைந்து குழந்தைகளுக்கு தொழில்நுட்பத்தின் நன்மை, தீமை ஆகியவற்றை விளக்கி, தன்னடக்கம் கற்றுத்தர வேண்டியது அவசியம். திறந்த உரையாடல்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், மற்றும் வெளிப்புற விளையாட்டுகள் ஆகியவற்றின் ஊடாக திரை சார்பை (Screen Dependency) இயல்பாகக் குறைக்க முடியும்.

இதனுடன் தொடர்புடைய மற்றொரு முக்கிய பிரச்சினையும் அண்மையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மருத்துவ நிபுணர்கள் தெரிவிப்பதாவது, நாடு முழுவதும், குறிப்பாகப் பெண் மாணவிகள் மத்தியில் 'பானிக் அட்டாக்' (Panic Attack) எனப்படும் திடீர் மனஅழுத்தக் கோளாறுகள் அதிகரித்து வருகின்றன. இது உடனடி சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்லாமல், குழந்தைகளும் இளம்வயதினரும் எதிர்கொள்ளும் மனஅழுத்தங்களின் ஆழத்தையும் வெளிப்படுத்துகிறது.

இளையோர்மனநலப்பிரச்சினைகள்பெரும்பாலும்கவனிக்கப்படாமல் போகின்றன. இதை சமாளிக்க மனநல கல்வியைப் பாடத்திட்டத்தில் இணைப்பது முக்கியம். ஆசிரியர்களும், பள்ளி ஆலோசகர்களும் (Counsellors) மாணவர்களில்மனஅழுத்தத்தின்ஆரம்பஅறிகுறிகளை அடையாளம் காணும் பயிற்சி பெற வேண்டும். பெற்றோர்களும் இதற்கான விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். பள்ளிகளில் திறந்த உரையாடல்களை ஊக்குவிக்கவும், மனஅழுத்தத்தைப் பற்றிய கலந்துரையாடல்களை வழக்கமாக்கவும் அரசாங்கம் மற்றும் கல்வித்துறை இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளின் அடிப்படை காரணங்களைப் புரிந்து கொள்ளவும் அவசியம். தேர்வழுத்தம், குடும்பப் பிரச்சினைகள், சமூக ஊடகப் பாதிப்பு, அல்லது வேறு ஏதாவது காரணமா என்பதை ஆராய்ந்தால்தான் சரியான தீர்வுகள் அமையும்.

முடிவில், குழந்தைகளின் நலனைப் பாதுகாப்பது என்றால் அவர்களைச் சுற்றி தடைகளைக் கட்டுப்படுத்துவது அல்ல. அவர்களைப் புரிந்துகொள்ளவும், நம்பிக்கையுடன்வழிநடத்தவும்கற்றுக்கொடுக்கவும் செய்வதே உண்மையான பாதுகாப்பாகும். நம்பிக்கை, புரிதல், கல்வி — இந்த மூன்றும் ஒன்றிணைந்தால் மட்டுமே நமது குழந்தைகள் ஆரோக்கியமான மனத்துடன், புத்திசாலித்தனமான எதிர்காலம் நோக்கி முன்னேற முடியும்.

# இலங்கை – ஆஸி. இரு நாடுகளும் கடன் மறுசீரமைப்பில் ஒப்பந்தம்

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பான இருதரப்பு ஒப்பந்தங்களில், இலங்கை ஆளும்தரப்பும் ஆஸ்திரேலிய ஆளும்தரப்பும் நேற்று நிதி அமைச்சில் கையெழுத்திட்டுள்ளன.

இலங்கை ஆளும்தரப்பின் சார்பில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அதேநேரம் ஆஸ்திரேலிய ஆளும்தரப்பு சார்பில் இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர் ஆணையராகப் பதவி ஏற்கவிருக்கும் மெத்திவ் டக்வர்த் (Matthew Duckworth) கையொப்பமிட்டார்.

இதன்மூலம் இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் அதன் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் எட்டமுடிந்துள்ளது.

அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் எட்டப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை சரியான நேரத்தில் முடிப்பதற்கான இலங்கை ஆளும்தரப்பின் உறுதியான அர்ப்பணிப்பை இந்த ஒப்பந்தங்கள் பிரதிபலிக்கின்றன.

ஆக்கப்பூர்வமான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஊடாக, நிலுவையில் உள்ள கடன்களை மறுசீரமைப்பதன் மூலம் இலங்கைக்கு கடன் நிவாரணம் வழங்க அவுஸ்திரேலிய ஆளும்தரப்பு இணங்கியுள்ளது.

இந்த ஒப்பந்தங்களின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட மொத்த கடன் தொகை சுமார் 39 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இருதரப்பு ஒப்பந்தம் இலங்கையின் பொருளாதார நிலைத்தன்மையை நோக்கிய பயணத்திற்கு பங்களிப்பதுடன், இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான ஆழமான மற்றும் நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துகிறது.

அவுஸ்திரேலிய ஆளும்தரப்பின் தொடர்ச்சியான ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் இலங்கை ஆளும்தரப்பு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

# மறைந்த தலைவர் மாவையின் பிறந்த நாள் நினைவேந்தல்





இலங்கை தமிழ் அரசுக் கட்சியின்மூத்ததலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மாவை சேனாதிராசாவின் 83வது பிறந்ததினத்தை முன்னிட்டு அவரது மாவிட்டபுரத்தில் உள்ள அலுவலகம், மற்றும் இல்லத்தில் நினைவேந்தல் நேற்று நடைபெற்றது.

மாவிட்டபுரத்தில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்ற நினைவேந்தலில் மறைந்த மாவைசேனாதிராஜாவின் உருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன்



தெல்லிப்பளையை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் , பயன்தரும் மரக்கன்றுகளும்வழங்கிவைக்கப்பட்டது.இந் நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சி தலைவர் பொருளாளர் கனகசபாபதி,காங்கேசன் துறை தொகுதி கிளை உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள் .



இதேவேளை அவரது இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், மாவை சேனாதிராசாவின் குடும்ப உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.


FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN
LAPTOPS
DIWALI MEGA OFFER
NALIN Information Technologies Pvt Ltd.
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
3 years warranty
Windows 11
3 years warranty
Windows 11
M365
1 years warranty
Windows 11
Lenovo
2 years warranty
Windows 11
msi
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Installment Payment Allowed
Terms & Conditions Apply
Island wide free delivery
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# ‘ஒரு வாக்கின் சக்தி’ குறும்பட போட்டி குறித்து மாணவருக்கு விளக்கமளிப்பு





தேர்தல் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில்‘ஒரு வாக்கின் சக்தியின் கதைகள்’ நடைபெறும் குறும்படப் போட்டி - 2025 தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையினரின் பங்கேற்புடன் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

குறும்படத்திற்கு கதை எழுதுவது எப்படி, புகைப்பட கருவி நுட்பங்கள் மற்றும் காணொளி செம்மையாக்கம்,

கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி குறும்படத்தை எப்படி உருவாக்குவது,

செயற்கை நுண்ணறிவு (புணு) பயன்படுத்தி குறும்படங்களை எவ்வாறு தயாரிப்பது உள்ளிட்ட பல விடயங்கள் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

இதன்போது யாழ் மாவட்ட பாடசாலைகளில் ஊடக கற்கைகள், நாடகம் அரங்கியல் கற்கை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்துவதையும், ஆக்கப்பூர்வமான வெளிப்பாடு மூலம் தேர்தல் செயல்பாட்டில் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இலங்கைத் தேர்தல் ஆணையம் ’ஒரு வாக்கின் சக்தியின் பௌரா கதைகள்’ எனும் குறும்படப் போட்டியை இந்த ஆண்டு ஏற்பாடு செய்துள்ளது.

திறந்த பிரிவு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பிரிவு என

இக்குறும்பட போட்டியானது இரண்டு பிரிவுகளாக நடைபெற உள்ளது. இதற்கான தயாரிப்புக்களை

சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி நவம்பர் 14 ஆகும். தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளம் ஊடாக மேலதிக விபரங்களை அறிய முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# போக்குவரத்து அபராதங்களைச் செலுத்தும் செயலி பற்றி பொலிஸாருக்கு செயலமர்வு

போக்குவரத்து பொலிஸாரால் விதிக்கப்படும் அபராதங்களை செயலி ஊடாக செலுத்துவது தொடர்பான பயிற்சி செயலமர்வு யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் பிரிவுகளின் போக்குவரத்துப் பொலிசார் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து சாரதிகளின செயற்பாடுகளை இலகுபடுத்தும் முகமாக போக்குவரத்து பொலிசாரால் விதிக்கப்படும் அபாரதங்களை அவ் விடத்திலேயே செயலி மூலம் செலுத்தும் நடைமுறை நாடு பூராகவும் நடைமுறைக்கு வந்துள்ளது.

அதனடிப்படையில், யாழ்ப்பாணத்தில் இதனை நடைமுறைப்படுததும் வகையில் போக்குவரத்து பொலிசாருக்கு தெளிவூட்டல் செயலமர்வு இடம்பெற்றது.

# லசந்த கொலைச் சந்தேகநபர்கள் பொலிஸாரின் தடுப்புக் காவலில்

## நீதிமன்றம் அனுமதி வழங்கியது

வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகரவை சுட்டு கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவத்தில் துப்பாக்கி சூட்டை நடத்திய நபர் மற்றும் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உட்பட ஆறு சந்தேக நபர்களையும் 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.10.2025இல் வெளியிடப்பெற்றது